# உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

## தாவர நாற்றுமேடை நுட்ப முறைகள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி : 6.0 வணிக ரீதியல் தரமிக்க தாவரங்களை உற்பத்தி செய்வதற்கான ஆயத்தத்தை வெளிக்காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் : 6.2 தாவர நாற்றுமேடை நுட்ப முறைகளை விசாரணை செய்வார்.

# தாவர நாற்றுமேடை நுட்ப முறைகள்





## நாற்றுமேடை

நடுகைப் பொருட்களை (நாற்றுக்கள், வெட்டுத் துண்டங்கள்) தரையில் நிரந்தரமாக நடுகை செய்யும் வரையில் பாதுகாப்பாகப் பேணி வருகின்ற நாற்றுக்களின் இனப்பெருக்கத்திற்குத் தேவையான சகல கருமங்களையும் செய்கின்ற ஓர் இடமாகும்.



## நாற்றுமேடை அமைத்தலின் முக்கியத்துவம்

- ♣ பாதகமான சூழல் நிபந்தனைகளில் இருந்து நாற்றுக்களைப் பாதுகாத்தல்.
- ♣ சிறிய இடப்பரப்பில் பெருந்தொகையான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- ♣ நாற்றுமேடைப் பராமரிப்பாளர்களுக்கு உழைப்பு, நேரம், மூலப்பொருள் முகாமை இலகு, பொருளாதார ரீதியாக இலாபம்.
- ♣ நாற்றுக்களை சூழல் நிபந்தனைகளுக்கு இசைவாக்கல் இலகு.
- ♣ சீரான நாற்றுக்களைப் பெறலாம்.
- ♣ வித்துக்களின் வீண் விரயத்தைத் தவிர்க்கலாம்.
- ♣ போகங்களிற்கிடையிலான இடைவெளியைக் குறைக்கலாம்.
- ♣ வீரியமான நாற்றுக்களைப் பெறலாம்.
- ♣ நோய்ப் பீடைத் தாக்கங்களைக் குறைக்கலாம்.
- ♣ பயிர்ச்செய்கை நிலத்தில் பொறிகளைப் பயன்படுத்த இலகு.
- ♣ ஒட்டுக் கன்றுக்களைப் பெறலாம்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



# நாற்றுமேடை வகைகள்

- **நாற்றுமேடை**
  - **பாத்தி வகை**
    - உயர்பாத்தி (ஈரவலயம் / நீர் தேங்கி நிற்கும் இடங்கள்)
    - மட்டப்பாத்தி
    - தாழ்பாத்தி (உலர்வலயம்)
  - **விசேட வகை**
    - **சாடி வகை**
      - நிரந்தர சாடி
        உ-ம் : பிளாத்திக் சாடி
      - தற்காலிக சாடி
        உ-ம் : பொலித்தீன் சாடி, தேங்கய் உரிமட்டை
    - **ஊடகத்திற்கு அமைய**
      - மணல் நாற்றுமேடை (ஒட்டுக்கன்றுகள் பெற)
      - நெரிடோக்கா / துண்ட நாற்றுமேடை (பூசணி)
      - டபொக் நாற்றுமேடை (நெல்)








Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



# வெவ்வேறு நாற்றுமேடை பாத்திகள்

## உயரமான நாற்றுமேடை





உயரமான நாற்றுமேடைகளிற்கு 10 - 15 cm வரை உயரமான பாத்திகளை உருவாக்க வேண்டும்.
இவை கூடிய மழைவீழ்ச்சி பெறப்படும் இடங்களுக்கும் நீர் தேங்கி நிற்கும் இடங்களுக்கும் பொருத்தமானவை.

**பயன்பாடு :**
வித்துக்களையிடும் நாற்று மேடைகளுக்காக

தொகுப்பு : திருமதி.வே.பாலேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழினுட்பம் (யாழ். கல்வி வலயம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தாழ்வான நாற்றுமேடை





தாழ்வான நாற்றுமேடைகளிற்கு 10 - 15 cm வரை தாழ்வான பாத்திகளை உருவாக்க வேண்டும்.
இவை குறைந்த மழைவீழ்ச்சி பெறப்படும் இடங்களுக்கும் நீர் வடியும் இடங்களுக்கும் பொருத்தமானவை.

**பயன்பாடு :**
வித்துக்களையிடும் நாற்று மேடைகளுக்காக

தொகுப்பு : திருமதி.வே.பாலேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழினுட்பம் (யாழ். கல்வி வலயம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மணல் நாற்றுமேடை




செங்கற்களினால் அணையிடப்பட்டு மணல் நிரப்பப்பட்ட நாற்றுமேடை

**பயன்பாடு :**
பழமரங்களில் ஒட்டுதலை மேற்கொள்வதற்காக ஒட்டுக் கட்டைகளை தாபித்துக் கொள்ளும் நாற்றுமேடை


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நெரிடோகா நாற்றுமேடை





சலாகைகளால் உருவாக்கப்பட்ட சட்டகக் கட்டமைப்பு 1:1 என்ற விகிதத்தில் மேல்மண், காய்ந்த சாணம் என்பனவற்றைக் கொண்ட நடுகை ஊடகத்தால் நிரப்பப்பட்ட பாத்தி ஒவ்வொரு அலகுள்ளும் ஒரு விதை இடப்பட்டு முளைத்த பின்னர் குறித்த பகுதியுள்ளிருந்து வேறுபடுத்தப்பட்டு நடப்படும்.

**பயன்பாடு :**

நெரிடோகா நாற்றுமேடை பயன்படுத்தப்படுவது நாற்றுமேடையிலிருந்து அகற்றி மீண்டும் வயலில் அல்லது தோட்டத்தில் தாபிக்கும் பொழுது வேர்கள் பழுதுபடும் குக்கபிற்றேசியே குடும்பத் தாவரங்கள் மற்றும் பல்லாண்டுத் தாவரங்களின் பொருட்டாகும். இதன் மூலம் வேர்களுக்கு உண்டாகும் சேதத்தின் அளவை இழிவாக்கிக் கொள்ளலாம்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கொள்கலன் நாற்றுமேடை




கொள்கலன் நாற்றுமேடைகளில் அலுமினியம், பிளாஸ்ரிக், மூங்கில், தேங்காய்ச் சிரட்டைகள், வாழைத் தடல்கள், வாழை இலைகள் போன்றவற்றை கொள்கலன்களாக பயன்படுத்துவதுண்டு.

கொள்கலன் நாற்றுமேடைகளில் நாற்றுக்கள் முதிர்ந்ததும் அவற்றை தெரிவு செய்து தரப்படுத்தி வெற்றிடங்களுக்கு மீண்டும் ஊடகத்தை நிரப்பி கொண்டு செல்வதற்கு தயார் செய்யப்படும்.

பிளாத்திக்கு கூடைகளில் அல்லது தட்டுக்களில் அடுக்கி கொண்டு செல்லப்படும். கொள்கலன்கள் மீண்டும் பயன்படுத்தப்படுபவையாயின் பங்கசுக் கொல்லிகள் கொண்டு கிருமியழிக்கப்பட வேண்டும்.

**பயன்பாடு :**

தரையில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் பொழுதும் மண்ணானது தாவர வளர்ச்சிக்குப் பொருத்தமற்றதாக இருக்கும் பொழுதும் கொள்கலன் நாற்றுமேடை பயன்படுத்தப்படும்.

தொகுப்பு : திருமதி.வே.பாலேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழினுட்பம் (யாழ். கல்வி வலயம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



வணிக மட்டத்தில் நாற்று உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் சாடி வகைகள்



- கறுப்பு நிறப் பொலித்தீன் சாடிகள்
- அலுமினிய இதழ் (Aluminium Foil) சாடிகள்
- கடதாசிச் சாடிகள்
- கூட்டுச் சாடிகள் (Compots)

சாடி வகை நாற்றுமேடையின் அனுகூலம்

- நாற்றுக்களை கொண்டு செல்லல் இலகு.
- சிறந்த வேர்த்தொகுதி கொண்ட செழிப்பான நாற்று.










Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# நாற்றுமேடைப் பராமரிப்புக் கருமங்கள்.

- நீர்ப்பாசனம் (பூவாளி, mist)



- பசளையிடல் (Fertigation)
- நாற்றுக்களை வலிமையாக்கல்
  நீர்ப்பாசனம் ↓
  சூரிய ஒளி ↑
- பீடைக்கட்டுப்பாடு
- நாற்றுக்களைத் தரப்படுத்தல்

தொகுப்பு : திருமதி.வே.பாலேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழினுட்பம் (யாழ். கல்வி வலயம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk









## நாற்றுக்களைக் கொண்டு செல்லலுக்காக ஆயத்தப்படுத்தல்.

**01**
சாடிகளை நிரைப்படுத்தல்

**02**
சாடிகளை சுத்திகரித்தல்

**03**
களைகள் பூண்டுகளை அகற்றுதல்

**04**
இடைவெளிகளை நிரப்புதல் (நடுகை ஊடகங்களால் மீள்நிரப்பல்)

**05**
பிளாத்திக் கூடைகளில் / தட்டுகளில் நாற்றுச் சாடிகளை அடுக்குதல்

**06**
கூடைகள் / தட்டுக்களைப் பயன்படுத்த முன் அவற்றைப் பங்கசு கொல்லி பயன்படுத்தி சுத்திகரித்தல்







தொகுப்பு : திருமதி.வே.பாலேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழினுட்பம் (யாழ். கல்வி வலயம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## நாற்றுச் சாடிகளுக்கு தரநிர்ணயம் பெறல்



- வித்துச் சட்டத்தின்படி விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்தல்.
- அதன் போது வித்துக்கள் மற்றும் நடுகைப் பொருட்களை உறுதிப்படுத்தும் சேவை மூலம் நாற்றுமேடைகளைப் பரிசீலித்து உற்பத்தி செய்யும் நாற்றுக்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்படும்.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk